ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2196/4 - 2020 ඔක්තෝබර් මස 05 වැනි සඳුදා - 2020.10.05
*2196/4 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: DIV/MW/LND/3/1/2-7.
காணி அமைச்சின் கோவை இல.: 4-3/16/2017/PT/270.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், மாவத்தகம பிரதேச செயலாளர் பிரிவில், கந்தஹய கோறளே சிறு பிரிவில், இல. 653, பரகஹதெனிய கிராம அலுவலர் பிரிவில், பரகஹதெனிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அத்தியட்சகரால் தயாரிக்கப்பட்ட 2020.05.20 ஆந் திகதிய இ. கி. வ. 1107 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட சுமார் 0.0127 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டின் விபரம் :

01. துண்டு இல. 01
காணியின் பெயர் : கனட்டிகொல்லவத்தை - படஹெலகொட்டு வத்தை; விபரம் : வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர் : சாதிக்குல் முனவ்வரா அஸீஸ் நிசாம்; விஸ்தீரணம் : 0.0127 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மாவத்தகம பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டி. பீ. எஸ். குமார,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
மாவத்தகம.

பிரதேச செயலகம்,
மாவத்தகம,
2020, செத்தெம்பர் 30.

10 - 772

1A - G 33039 - 20 (2020/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.